**பேஸ் லைன் வீதி செயற்திட்டம் - கட்டம் III - 2013**

-----------------------------------------------------------------------------------

பேஸ் லைன் வீதி செயற்திட்டம் - கட்டம் III இன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது 2009 நவம்பர் 19 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன**

-----------------------------------------------------------------------------------

வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது செயற்திட்டத்தின் அமுலாக்கல் மற்றும் நிறைவேற்றல் முகவராக உள்ளது. செயற்திட்டமானது கொழும்பு – கொரணை வீதிக்கு உயர் மட்ட வீதியை நிர்மாணிப்பதற்கு கிருலப்பனையிலிருந்து புதிய வீதியொன்றை நிர்மாணிப்பதன் மூலம் வீதி போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு அமுலாக்கப்படுகின்றது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 719 மில்லியனானதுடன் செயற்திட்டத்தின் முழுக் கிரயமும் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2009 இல் தொடங்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

-----------------------------------------------------------------------------------

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வைபார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டினையும், செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு ஏற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் கண்ணோட்டத்தில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியவையாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்ட அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்,

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 213,900 ஆகவிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 381,561,214 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம். |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நடைபெறும் வேலைகள் | 213,900 | 175,911,800 | 381,561,214 |
| | 213,900 | 175,911,800 | 381,561,214 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

செயற்திட்டத்தால் பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **மூலங்கள்** | **2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு** | **2013 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள்** | **2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய திரண்ட நிதி** |
|---|---|---|---|
| | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா. மில்** |
| இலங்கை அரசாங்கம் | 126.5 | 126.07 | 331.6 |
| | 126.5 | 126.07* | 331.6 ** |

* 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 125,880,000 தொகையான செலுத்த வேண்டியவை மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 20,275 பெறுகைகளில் தீர்க்கப்பட்டமையால் இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து இந்தத் தொகை வேறுபடுகின்றது.

** 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 50,000,000 தொகையான செலுத்த வேண்டிய இழப்பீடு மற்றும் ரூபா 51,963 முற்பணம் மற்றும் முற்கொடுப்பனவு என்பன காரணமாக உள்ளடக்கப்பட்டிருக்காமையால் இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து இந்தத் தொகை வேறுபடுகின்றது.

### 6.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேஸ்லைன் வீதியின் முன்னேற்றத்திற்காக அமுலாக்கப்பட்ட செயற்திட்டத்தின் கட்டம் III ஆன செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2009 இல் தொடங்கப்பட்டிருந்த போதிலும், கிருலப்பனையிலிருந்தான புதிய வீதி நிர்மாணத்தின் முன்னேற்றம் 2012 திசெம்பர் 31 இலிருந்து காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒட்டுமொத்த செயற்திட்ட திட்டம் மற்றும் செயல்நடவடிக்கை திட்டங்கள் செயற்திட்டத்தால் உரிய தகவல்களுடன் தயாரிக்கப்பட்டிருக்காததுடக் இதன் விளைவாக வீதி நிர்மாண வேலையின் பூர்த்தியாக்கல் திகதி நிர்ணயிக்க முடியாதுள்ளது.

(ஆ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம்,வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது இச் செயற்திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்த மக்களிற்காக வீடமைப்பு திட்டம் வடிவமைப்பதற்காக 2008 இல் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 1,175,300 தொகை செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 வரையும் வடிவமைப்புகளை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2.728 கெட்டயர் பரப்பளவுள்ள காணியின் 143 துண்டுகள் சுவீகரிப்பதற்கு எதிர்பார்க்கபபட்டிருந்த போதிலும் 0.3447 கெட்டயர் பரப்பளவுள்ள 10 காணித்துண்டுகள் மாத்திரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்டிருந்தது.